ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 160/41 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාද — 1975.04.19
160/41 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண்: டபிளியு 68(50)/75.

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சனாதிபதியின் அலுவலகம்,
நுவரெலியா, எப்பிறல் 19, 1975.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (பாதுகாப்பையும் பொது ஒழுங்கையும் பேணுதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (அ) ஆளெவரும், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமூகமாயிருக்கும் பொழுது, அல்லது ஏதேனும் ஊர்வலத்தின்பொழுது அல்லது ஆர்ப்பாட்டத்தின் பொழுது சுடுபடைக்கலன் எதனையும் தாங்கியிருத்தலாகாது அல்லது வெளிக்காட்டுதலாகாது.

(ஆ) ஆளெவரும்—

(i) வேறு ஆட்களுக்குச் சுடுபடைக்கலன்களை உபயோகிப்பதில் பயிற்சியளித்தலாகாது, அல்லது அதனைப் பழக்குதல் ஆகாது; அல்லது சுடுபடைக்கலன்களை உபயோகிப்பதில் தமக்குப் பயிற்சியளிக்கப்பட அல்லது அது பழக்கப்பட அநுமதித்தலாகாது; அல்லது

(ii) வேறு ஆட்கள் சுடுபடைக்கலன்களைத் தாங்கியவண்ணம் எவையேனும் இராணுவ அணிவகுப்புக்களை அமைப்பதை அல்லது பயிற்சி அளிப்பதை அல்லது அதுபோன்ற அப்பியாசங்களைப் பழகுவதனைப் பணித்தலாகாது அல்லது அவற்றில் அறிவுறுத்துரை வழங்குதலாகாது; அல்லது சுடுபடைக்கலன்களைத் தாங்கியவண்ணம் எவையேனும் இராணுவ அணிவகுப்புக்களை அமைப்பதில், அல்லது பயிற்சியளிப்பதில், அல்லது அதுபோன்ற அப்பியாசங்களைப் பழக்குவதில் தாம் பணிக்கப்பட அல்லது அறிவுறுத்துரை வழங்கப்பட அநுமதித்தலாகாது.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறுகின்ற அல்லது மீறியுள்ள ஆள் எவரையும் பொலிசுப்படையிலுள்ள உறுப்பினர் எவரும் அல்லது ஆயுதந்தாங்கிய படைச்சேவையிலுள்ள உறுப்பினர் எவரும் பிடியாணையின்றிக் கைதுசெய்து அவ் ஆளின் உடைமையில் காணப்படும் சுடுபடைக்கலன் எதனையும் தமது கட்டுக்காப்பில் எடுக்கலாம்.

4. இரண்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுள் எதனையும் மீறும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுதும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலத்துக்கு இருவகையிலொருவகை மறியலுக்கு அல்லது அத்தகைய குற்றப்பண, மறியல் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அத்தவறைப் புரியும்போது அவரது உடைமையில் காணப்பட்ட சுடுபடைக்கலன் எதுவும் பறிமுதலாக்கப்படுவதற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

5. நாலாம் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றைப் புரிவதில் வேறெவரேனும் ஆளுக்கு உதவிபுரியும் அல்லது உடந்தையாகவிருக்கும் ஆளெவரும் அவரே தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் ஆளுக்கான அதே தண்டத்துக்கு உள்ளாதலும் வேண்டும்.

6. சட்டத்துறைத் தலைமையதிபதியின் சம்மதமின்றி நீதிமன்றமெதுவும், இந்த ஒழுங்குவிதிகளின்கீழ் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள தவறொன்றைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆள் எவரையும் பிணையில் விடுதலாகாது.

7. இரண்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் பொலிசுப்படை உறுப்பினர் எவர்க்கேனும் ஆயுதந்தாங்கிய படைச்சேவை உறுப்பினர் எவர்க்கேனும் இலங்கைப் பயிலிளவற் சிறப்பணியுறுப்பினர் எவர்க்கேனும் ஏற்புடையனவாகா.

8. இவ் ஒழுங்குவிதிகளில் "சுடுபடைக்கலன்" என்பது றைபிள், சிறு துவக்கு, பிஸ்தோல், றிவால்வர், போஜிச் சுடுபடைக்கலன் எதனையும் உள்ளடக்கும்.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.